


**25.9.2024**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியாவில் தயாரிப்போம் இயக்கத்தால் பல்வேறு துறைகளில் ஏற்றுமதி அதிகரித்து பொருளாதாரம் வலுப்பெற்றுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. ஜம்மு காஷ்மீரில் 26 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இன்று நடைபெறும் இரண்டாவது கட்ட வாக்குப்பதிவில் பகல் 1 மணி நிலவரப்படி **36.93** சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன.

3. பாராலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டை சேர்ந்த வீர வீராங்கனைகளுக்கு 5 கோடி ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று வழங்கினார்.

4. தமிழ்நாட்டில் காலாண்டு விடுமுறைக்கு பின்னர் பள்ளிகள் வரும் 7 ஆம் தேதி திறக்கப்படும் என பள்ளிகல்வித்துறை அறிவித்துள்ளது.

5. **Macao** ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு கிடாம்பி ஸ்ரீகாந்த், **Ayush Shetty** ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**********

<u>பிரதமர்</u>

படைப்பாற்றல் திறன் மற்றும் உற்பத்தி மையமாக நம் தேசத்தை மேம்படுத்த 140 கோடி இந்தியர்களின் ஒட்டுமொத்த முயற்சியை இந்தியாவில் தயாரிப்போம் இயக்கம் பறைசாற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டம் தொடங்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவை ஒட்டி சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்து

செய்தியில், இத்திட்ட வளர்ச்சிக்கு மத்திய அரசு வழங்கும் ஊக்கமும், உத்வேகமும் தொடரும் என்று உறுதியளித்துள்ளார்.

இந்தியாவில் தயாரிப்போம் இயக்கத்தால், பல்வேறு துறைகளில் ஏற்றுமதி அதிகரித்திருப்பதோடு, திறன் வளர்ச்சி மூலம் நாட்டின் பொருளாதாரம் வலுப்படுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

இந்தியாவில் தயாரிப்போம் இயக்கத்தை கடந்த 10 ஆண்டுகளாக முழு முயற்சியுடன் முன்னெடுத்துச்சென்ற அனைவருக்கும் பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் சுய சார்பு மற்றும் வளர்ச்சி அடைந்த பாரதம் கட்டமைக்கப்படும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

**********

<u>கிரண் ரிஜிஜூ</u>

வக்ஃப் வாரிய திருத்த மசோதாவை மறு ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் அறிக்கை, வரவிருக்கும் குளிர்கால கூட்டத்தொடரின், முதல் வாரத்தில் சமர்ப்பிக்கப்படலாம் என்று, மத்திய சிறுபான்மை விவகாரங்களுக்கான அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

நரேந்திரமோடி அரசின், 3 ஆவது ஆட்சி காலத்தின், 100 நாட்கள் சாதனை தொடர்பாக புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இம்மசோதா தொடர்பான விரிவான ஆலோசனைகள் தற்போது நடைபெற்று வருவதாக கூறினார்.

பல்வேறு சமூக அமைப்புகள், அரசு தரப்புகளின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டு வருவதாகவும அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி ஆட்சியின் கீழ், செயல்படுத்தப்படும் சிறுபான்மையினர் நலத்திட்டங்களை எடுத்துரைத்த அவர், பல்வேறு வாய்ப்புகளுடன் பாதுகாப்பான சூழல் அவர்களுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

சிறுபான்மையின சமூகத்தை சேர்ந்த கைவினைஞர்கள் தங்களது கைவினை மற்றும் கைத்தறி உற்பத்தி திறன்களை எடுத்துக்காட்டும் சிறப்பு விற்பனை கண்காட்சி சந்தை புதுதில்லியில் நடைபெற்றதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஹஜ் பயணிகளின் வசதிக்காக சிறப்பு செயலி அறிமுகப்படுத்தப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், இந்தியாவிலிருந்து ஆண்டுதோறும் ஒரு லட்சத்து 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஹஜ் யாத்திரிகர்கள் மெக்கா செல்வதாக குறிப்பிட்டார்.

**********

அனுப்பிரியா பட்டேல்

எயிட்ஸ் வைரஸை வேரோடு களைவதற்கான ஐ.நா சபையின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்கை எட்ட, இந்தியா உறுதியுடன் செயலாற்றி வருவதாக, மத்திய சுகாதார குடும்ப நலத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பொதுசபையில் பன்முக வளர்ச்சி கூட்டத்தில் உரையாற்றிய அவர் உலகளாவிய தடுப்பு மருந்துகளை பெருமளவில் விநியோகிக்கும் நாடாக இந்தியா திகழ்கிறது என்றார்.

**H.I.V** வைரஸ் தடுப்பு கொள்கைகளை அனைத்து மாநிலங்களும் முன்னெடுத்துச்சென்று இதுதொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

**********

தேர்தல்

ஜம்மு காஷ்மீரில் 6 மாவட்டங்களின் 26 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு 2-ஆம் கட்டமாக இன்று நடைபெறும் வாக்குப்பதிவில் பகல் 1 மணி நிலவரப்படி **36.93** சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை தொடர்ந்து நடைபெறும்.

ஏராளமான வாக்காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து ஆர்வத்துடன் வாக்களித்து வருகின்றனர்.

இத்தேர்தலில் 239 வேட்பாளர்களின் வெற்றியை 25 லட்சத்து 78 ஆயிரம் வாக்காளர்கள் நிர்ணயிக்கின்றனர்.

ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வகையில் மக்கள் அதிக அளவில் திரண்டு வந்து வாக்களிக்க பிரதமர் திரு.நரேந்திரமோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முதல்முறையாக வாக்களிக்கும் இளையோருக்கு சமூக வலைதளம் மூலம் தமது வாழ்த்துக்களை பிரதமர் உரித்தாக்கியுள்ளார்.

ஜம்மு காஷ்மீர் மற்றும் ஹரியானா மாநில சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை வரும் 8 ஆம் தேதி நடைபெறும்.

**********

வளர்ச்சி குறியீடு

ஆசியாவின் ஆற்றில்மிகு வளர்ச்சி குறியீட்டு தரவரிசை பட்டியலில் இந்தியா ஜப்பானை பின்தள்ளி 3ஆவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளது.

கோவிட்டிற்கு பிந்தைய வலுவான பொருளாதார வளர்ச்சியால், இந்தியாவின் பொருளாதார திறன் 4.2 புள்ளிகள் உயர்ந்து ஆசிய குறியீட்டு அறிக்கையில் முன்னேறியுள்ளது.

அனைத்து வள ஆதார செயல்பாட்டிலும், இந்தியா சிறப்பாக செயலாற்றி உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள இந்த அறிக்கை, குறிப்பாக எதிர்கால வள ஆதாரங்கள் நிலையில் 8.2 புள்ளிகளுடன் இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

இந்தியாவின் இளையோர் சக்தியின் செயல்பாட்டு திறன், வரும் காலங்களில், அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை, இந்த வளர்ச்சி, பிரதிபலிப்பதாக இந்த அறிக்கை கூறுகிறது.

ஆசிய வளர்ச்சி குறியீடுகள் 27 நாடுகளை உள்ளடக்கியதாகும்.

**********

<u>தீன்தயாள் உபாத்யாயா</u>

விளிம்பு நிலை மக்களின் வளர்ச்சிக்காக செயலாற்றிய பண்டிட் தீன்தயாள் உபாத்யாயாவின் 108-ஆவது பிறந்த தினத்தை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் திரு.அமித்ஷா, திரு.ராஜ்நாத்சிங் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தியுள்ளனர்.

அன்னாரின் அர்ப்பணிப்பு மிகு சேவை என்றென்றும் நினைவு கூறப்படும் என்றும் அவருடைய அந்தியோதயா கொள்கை தேச வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றி வருவதாகவும் புகழாரம் சூட்டியுள்ளனர்.

**********

<u>முதலமைச்சர்</u>

பாரீஸில் நடைபெற்ற பாராலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டை சேர்ந்த வீர வீராங்கனைகளுக்கு 5 கோடி ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று வழங்கினார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறந்த கைத்தறி நெசவாளர்கள் 6 பேருக்கும்,

சிறந்த வடிவமைப்பாளர் 3 பேருக்கும் பரிசு தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களையும் முதலமைச்சர் வழங்கியுள்ளார்.

**********

<u>காலாண்டு விடுமுறை</u>

தமிழ்நாட்டில் காலாண்டு விடுமுறைக்கு பின்னர் பள்ளிகள் வரும் 7 ஆம் தேதி திறக்கப்படும் என பள்ளிகல்வித்துறை அறிவித்துள்ளது.

முன்னதாக 3ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் ஆசிரியர் சங்கம் விடுத்த கோரிக்கையை ஏற்று இந்நடவடிக்கை.

விடைத்தாள் திருத்தும் பணியை மேற்கொள்ளவும், அதனை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் ஆசிரியர் சங்கங்கள் போதிய அவகாசம் கோரப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**********

<u>மகேஷ் பொய்யாமொழி</u>

திருச்சியை தலைமையிடமாக கொண்டு தனிப்போக்குவரத்து கோட்டம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை குறித்து ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்று மாநில பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்தில் வட்ட பேருந்து சேவையை இன்று துவக்கிவைத்து அமைச்சர் பேசினார்.

வாய்ஸ்

**********

<u>ராமசந்திரன்</u>

தொழில்முனைவோருக்கான கடன் வழிகாட்டுதல் மூலம் தமிழகத்தில் வேலையில்லா நிலைமை மாறியுள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

உதகையில் இன்று நடைபெற்ற தொழில் முனைவோருக்கான கடன் வழிகாட்டுதல் முகாமில் பேசிய அவர், மாநிலத்தில் இளைஞர்கள் தொழில் முனைவோர்களாக வளர்ச்சி பெற்றுள்ளதாக கூறினார்.

இதனால் தமிழகம் தன்னிறைவு பெற்ற மாநிலமாக உருவெடுத்துள்ளது என்றார்.

தொழில்முனைவோருக்கு 55 லட்சம் ரூபாய் வரை 35 சதவிகித மானியத்துடன் வங்கி கடன் பெற்றுதர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**********

<u>செல்வபெருந்தகை</u>

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் மேற்கொள்ளப்படும் நீர்மின் நிலைய கட்டுமான பணிகள் விரைவில் முடிவடைந்து மின் உற்பத்தி தொடங்கப்படும் என்று தமிழ்நாடு சட்டபேரவை பொது கணக்கு குழு தலைவர் திரு.செல்வபெருந்தகை தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் பல்வேறு இடங்களை இக்குழுவினர் இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜேடர் பாளையம் பொதுப்பணித்துறை பூங்கா நீர் மேலாண்மை திட்டம்,

பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனை உள்ளிட்டவற்றை ஆய்வு செய்ததாக குறிப்பிட்டார்.

**********

<u>விபத்து</u>

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர் பேட்டை மேட்டத்தூரில் இன்று அதிகாலை நேரிட்ட சாலை விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.

திருச்செந்தூரிலிருந்து ஆரணி சென்று கொண்டிருந்த சுற்றுலா வேன் சாலையோர மரத்தில் மோதியதில் இந்த விபத்து நேரிட்டது.

காயமடைந்த 13 பேர் விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**********

கன்னியாகுமரி

மத்தியில் நரேந்திரமோடி அரசின் 3-வது ஆட்சிக்காலத்தின் 100 நாட்களில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளதாக கன்னியாகுமரியை சேர்ந்த வழக்கறிஞர் தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

**********

நாமக்கல் வாய்ஸ்

நாமக்கல் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற ஊட்டச்சத்து மாத விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஏராளமான மாணாக்கர் பங்கேற்றனர்.

இதில் பங்கேற்ற அரசு கலைக்கல்லூரி மாணவி தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

**********

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கு அடையாள அட்டைகளையும், காசோலைகளையும் ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் இன்று வழங்கினார்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இயற்கை வேளாண் சான்றிதழ் பெற விரும்பும் தனி நபர், சிறு குறு விவசாயிகள் உரிய விவரங்களுடன் விண்ணப்பிக்குமாறு மாவட்ட வேளாண் இணை இயக்குனர் திரு.ரவிசந்திரன் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் வரும் 28ஆம் தேதி நடைபெறுகிறது.

**********

கரூர் வாய்ஸ்

கரூர் மாவட்டம் குளித்தலை, அய்யர் மலையில் ரோப்கார் சேவை மீண்டும் இயக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

**********

மேட்டூர்

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு இன்றுமுதல் 15 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.

அணையின் நீர்மட்டம் சரிந்ததை அடுத்து இந்நடவடிக்கை

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 5 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

**********

<u>பேட்மிண்டன்</u>

**Macao** ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், **Ayush Shetty** ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

அதேபோல் கலப்பு இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் **Sumeeth Reddy, Sikki Reddy** இணை முன்னேறியுள்ளது.

**********